# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**சூன் – 2018**

**P102 உரைநடையும் நாடகமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. புதிய உரைநடையின் தந்தை என்றும், மேடைப் பேச்சின் தந்தை என்றும் போற்றப்படுபவர் யார்?
2. உரைநடை ஆசிரியர்களை அடையாளம் காட்டுவன எவை?
3. அரிச்சந்திர நாடகத்தை எதிர்க்கதை நாடகமாக்கியபோது என்ன பெயர் வைக்கப்பட்டது?
4. சங்கரதாஸ் சுவாமிகளின் மொழி வளத்தை எப்படிப் பிரித்து அறியலாம்?
5. சைவசித்தாந்தமும் செயல்முறை அறிவும் என்ற நூல் எதை உணர்த்துகிறது?
6. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?
7. நாடகங்களின் இரு வகைகள் யாவை?
8. கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சங்கரதாஸ் சுவாமிகளை எவ்வாறு புகழ்ந்தார்?
9. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை யார்?
10. பம்மல் சம்பந்த முதலியாருக்கு இராவ் பகதூர் பட்டம் எப்பொழுது வழங்கப்பட்டது?
11. மு.வ.வின் உரைநடையில் காணப்படும் இலக்கிய உத்திகள் எத்தனை?
12. சிவகாமி சபதத்தில் வரும் கதை நாயகி எவ்வூரில் எக்குலத்தில் பிறந்தார்?
13. குடந்தை நகர் கலைஞர் கோ யார் ?

14. சாகித்திய அகாடெமி பரிசு பெற்ற மு.வ.வின் நூல் எது?
15. மகா மகோபாத்தியாயர் –பொருள் தருக

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தெருக்கூத்தில் கட்டியங்கார் இடம் என்ன?
2. தெருக்கூத்தில் ஒப்பனை குறித்து விளக்குக.
3. அண்ணாவின் நடை பற்றி விவரி?
4. பாரதிதாசன் நாடங்கள் பற்றி விளக்குக.
5. சேதுப்பிள்ளையின் உரைநடை இலக்கிய நயங்களைப் பற்றி எழுதுக.
6. தெலுங்கு நாடகம் பற்றி விளக்குக.
7. புதிய வகை நாடகங்களை விளக்குக.
8. நாடக இலக்கண நூல்களை பற்றி எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதியார் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) உரைநடையில் தொன்மம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

2. (அ) வரலாற்று நாடகங்கள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) வானொலி நாடகம் பற்றி விவரிக்க.

3. (அ) தொலைக்காட்சி பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) 20ஆம் நூற்றாண்டு நாடகங்கள், இலக்கிய நாடகங்கள் குறித்து விவரிக்க.

* * *